பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
25 08 2026 TUESDAY 6 30 PM
வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- யுபிஐ பணப்பரிவர்த்தனை திட்டம் கடந்த பத்தாண்டுகளில், மின்னணு பணப்பரிவர்த்தனையில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- வேளாண் படிப்புகளில் சேர இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

- தமிழகத்தில் வணிக அனுமதிக்கான நடைமுறைகளை எளிதாக்கி 21 நாட்களுக்குள் ஒப்புதல் வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் செல்வி கீர்த்தனா தெரிவித்துள்ளார்.

- ஆவின் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 48 ரூபாயாக உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

- கோவை மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<

யுபிஐ பணப்பரிவர்த்தனை திட்டம் கடந்த பத்தாண்டுகளில், மின்னணு பணப்பரிவர்த்தனையில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில், யுபிஐ பணப்பரிவர்த்தனை தொடங்கப்பட்டு, பத்தாண்டுகள் நிறைவு பெற்று, 11வது ஆண்டில் இன்று அடியெடுத்து வைத்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் மின்னணு பரிவர்த்தனை பயணத்தின் திருப்புமுனையாக யுபிஐ திகழ்வதாகவும், ஒவ்வொரு இந்தியனும் இதுகுறித்து பெருமைப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுபிஐ பணப்பரிவர்த்தனை மூலம் கிடைத்துள்ள நன்மைகளை அனுபவத்தையும் எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<

*கடந்த 10 ஆண்டுகளில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கொண்டு வந்துள்ள மின்னணு பணபரிவர்த்தனை திட்டத்தின் மூலம், பெரிய அளவிலான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், கோடிக்கணக்கான மக்கள் விரைவாகவும், எளிமையாகவும் பணப்பரிவர்தனையை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*சிறு வியாபாரிகள் முதல், உள்ளூர் கடைகள், வியாபார நிறுவனங்கள் வரை ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்கான பரிவர்த்தனைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் கூறியுள்ளார்.*

*நாட்டின் மின்னனு வளர்ச்சிப் பாதையில், UPI மின்னணு பணப்பரிவர்த்தனை ஒருங்கிணைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*நாட்டின் சுயசார்பை உறுதிப்படுத்தும் வலிமையான அடையாளமாக மின்னணு பணப்பரிவர்த்தனை திகழ்கிறது என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*>>>>>>><<<<<<*

*UPI பணப்பரிவர்த்தனை திட்டம், தங்களது வியாபாரத்திற்கு உறுதுணையாக உள்ளது என்று மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சிறு வியாபாரிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் - வியாபாரிகள் 42 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<*

*வேளாண் பட்டப் படிப்புகளில் சேர இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.*

*புதுதில்லியில் இன்று வேளாண் பல்கலைக் கழக துணைவேந்தர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், வேளாண் கல்வி பாடத்திட்டத்தில் செயற்கை நுண்ணறிவையும் இணைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.*

*வேளாண்மை தொடர்பான பாடங்களை வகுப்பறைகளில் கற்றுத் தருவதை குறைத்துவிட்டு, வயல்வெளிகளிலும், அனுபவமிக்க விவசாயிகளோடும் இணைந்து மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும் என்று அவர் எடுத்துரைத்தார்.*

பல்கலைக் கழக துணை வேந்தர்கள் மற்றும் பேராசிரியர்கள், வேளாண் பாடத்தை கற்கும் ஆர்வத்தையும் மாணவர்களிடையே ஊக்குவிக்க வேண்டும் என்றும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<

ஆவணி அவிட்டம் மற்றும் பௌர்ணமி தினமான இம்மாதம் 27ஆம் தேதியன்று, கூடுதல் பத்திரப் பதிவுகள் நடைபெறும் என்பதை கருத்தில் கொண்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களில் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில பத்திரப் பதிவுத்துறை தலைவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களில் தலா 150 முன்பதிவு வில்லைகளும், இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களில் தலா 300 வில்லைகளும், இம்மாதம் 27ஆம் தேதி பயன்பாட்டிற்கென வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக அளவில் ஆவணப் பதிவு நடைபெறும் அலுவலகங்களில், 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு, கூடுதலாக 4 தட்கல் வில்லைகள் வழங்கப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<

தமிழகத்தில் வணிக அனுமதிக்கான நடைமுறைகளை எளிதாக்கி 21 நாட்களுக்குள் ஒப்புதல் வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் செல்வி கீர்த்தனா தெரிவித்துள்ளார்

பேரவையில் இன்று தமது துறை மானிய கோரிக்கையை தாக்கல் செய்து பேசிய அவர், தமிழகத்தில் ஜவுளி தோல் பொருட்கள். பட்டாசுகள், வாகன உதிரி பாகங்கள், நகைகள் உள்ளிட்ட தயாரிப்புகளை சர்வதேச அளவில் சந்தைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

செயற்கைக் கோள் மற்றும் உந்துவிசை உற்பத்திக்கான சிறப்பு விண்வெளி முதலீட்டு மண்டலங்கள் உருவாக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

ஒசூர், கிருஷ்ணகிரி பகுதிகளில் சரக்கு போக்குவரத்து தேவையை கருத்தில் கொண்டு, ஒசூரில் விமான நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் செல்வி கீர்த்தனா கூறினார்.

>>>>>>>><<<<<<

ஆவின் நிறுவனத்தின் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 48 ரூபாயாக உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக சட்டப்பேரவையில் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் விடுத்த அறிவிப்பில், ஆவின் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு 38 ரூபாயிலிருந்து 41 ரூபாயாக அதிகரிக்கப்படும் என்று தெரிவித்துள்ளதை வரவேற்பதாக கூறியுள்ளார்.

இருப்பினும், 3 லட்சத்திற்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்களின் பொருளாதார நலனையும், வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு, பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 48 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>>><<<<<<

நாகப்பட்டிணத்தில் தேசிய அளவிலான போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு இயக்கப் பேரணியை மாவட்ட ஆட்சியர் திரு. பிரவின் குமார் இன்று தொடங்கி வைத்தார்.

போதைப்பொருள் புழக்கத்திற்கு எதிரான மத்திய அரசின் விழிப்புணர்வு இயக்கத்தின் கீழ், பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் பேரணியில் கலந்து கொண்ட பின் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர்.

போதைப்பொருள் விற்பனை மற்றும் கடத்தலுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாட்டுப்புற விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

>>>>>>><<<<<<

*கிருஷ்ண ஜெயந்தி விழாவை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் கொலு பொம்மை தயாரிக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.*

*காஞ்சிபுரத்தில் உள்ள 40க்கு மேற்பட்ட குடும்பங்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளதாகவும், 50 ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாய் வரை கிருஷ்ணர் பொம்மைகள் விற்பனைக்காக தயாரிக்கப்படுவதாகவும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுரேஷ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – சுரேஷ் 33 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<*

*கோவை மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(Sound Byte - வி ஆர் துரை - 26 Sec. )*

*>>>>>>><<<<<<*

*மாவட்டச் செய்திகள்*

*தூத்துக்குடி மாவட்டத்தில் 15 நாட்களுக்கு மேலாக பள்ளிக்கு வராத மாணவர்கள் மீண்டும் பள்ளியில் சேர்வதற்கான நடவடிக்கைகளை சுகாதாரத்துறை, தொழிலாளர் நலத்துறை, மீன்வளத்துறை மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நலத்துறை அதிகாரிகள் ஒருங்கிணைந்து மேற்கொள்ளுமாறு ஆட்சியர் திரு. விஷு மகாஜன் அறிவுறுத்தியுள்ளார்.*

*>>>>>>><<<<<<*

*ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற முழக்கத்தை வெளிப்படுத்தும் வகையில், தூத்துக்குடி தனியார் பள்ளியில் ஓணம் பண்டிகை இன்று கொண்டாடப்பட்டது.*

*>>>>>>><<<<<<*

*காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனையை ஆட்சியர் திருமதி. சினேகா இன்று ஆய்வு செய்தார்.*

*>>>>>>><<<<<<*

*மதுரை, ராஜாஜி மருத்துவமனையில், பொதுமக்கள் வசதிக்காக புதிதாக கட்டப்பட்ட காத்திருப்போர் கூடம் இன்று திறந்து வைக்கப்பட்டது.*

*>>>>>>>end<<<<<<*